மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், துணைக் கேள்வியாக, அவருக்கு அனுகூலமாகக் கேட்டிருக்கிறார். அமைச்சர்கள் கேள்விக்குப் பின்னால் கேட்கப்படுகின்ற அத்தனைத் துணைக் கேள்விகளுக்கும் பதில்களைத் தயாராகச் சேகரித்துக் கொண்டு வர வேண்டுமென்பது மரபு. அமைச்சர்கள் அந்த மரபைக் கடைபிடிப்பார்கள்.

தரங்கம்பாடிக்குக் குடிநீர் வழங்கல்.

*13. வின் : திரு. எஸ். கணேசன் : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா ?

(அ) தரங்கம்பாடி பேரூராட்சி பகுதிக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்க குடிநீர் வடிகால் வாரியத்திடம் திட்டம் ஏதேனும் ஆய்வில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :

(அ) ஆம்.

(ஆ) தரங்கம்பாடி பேரூராட்சி பகுதிக்கு குடிநீர் வழங்குவதற்காக ரூ. 21 லட்சத்தில் ஒரு திட்டத்தினைத் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் உருவாக்கியுள்ளது. பேரூராட்சியின் நிதி நிலையைப் பற்றிக் கோரியுள்ள அறிக்கைகள் ஊரக வளர்ச்சி இயக்குநரிடமிருந்தும், தஞ்சை மாவட்ட ஆட்சியரிடமிருந்தும் வரப்பெற்றவுடன், மேற்கூறிய திட்டம் குடிநீர் வடிகால் வாரியத்தினால் அரசின் ஒப்புதலுக்காக அனுப்பி வைக்கப்படும்.

திரு. எஸ். கணேசன் : தலைவரவர்களே, வருவாய் மிகவும் குறைவாக உள்ள பேரூராட்சி அது. அங்கு வாழ்கின்ற பொது மக்களின் நீண்டகாலக் கோரிக்கையான, ரூ. 21 லட்சத்தை நீண்டகாலக் கடனாகவோ மானியமாகவோ கொடுத்து குடிநீர் பிரச்சினையைத் தீர்க்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவரவர்களே, மானியமாக அளிக்க வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். அப்படி இயலுமா என்று இப்போது திடீரென்று பதில் சொல்வதற்கில்லை. இருந்தாலும், தரங்கம்பாடியில் வறட்சி நிலையை உத்தேசித்து, இவைகளை எல்லாம் பற்றி ஆர அமர யோசனை செய்து முடிவு எடுக்க வேண்டும்.

1977 ஆகஸ்ட் 3]

திரு. யா.சை.மு. யூசுப்: தலைவரவர்களே, தற்போது ஊராட்சி மன்றங்களில் மட்டும் தான் மானியம் கொடுக்கப்படுகின்ற நிலையில் குடிநீர்த் திட்டங்கள் நிறைவேற்றப்படுகின்றன. பேரூராட்சி மன்றங்களுக்கும் இப்படி மானியம் ஒதுக்குவது என்பது விஸ்தரிக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: தலைவரவர்களே, மானியம் ஒதுக்கி செய்வதாக நான் இப்போது சொல்லவில்லை. அங்கே குடிநீர் வழங்க, கடனில் மூன்றில் இரண்டுபங்கு எல்.ஐ.சி. யிடமிருந்தும் மூன்றில் ஒரு பங்கு அரசாங்கத்திடமிருந்தும் கடனாகத் தரப்படுகிறது. அதைத் திருப்பித் தந்துவிட வேண்டும். வட்டி சதவிகிதமும் சொல்கிறேன்—ஒன்பது சதவிகிதம்.

திரு. என். கிட்டப்பா: தலைவரவர்களே, தரங்கம்பாடி வரலாற்றுப் புகழ் பெற்ற ஓர் நகரம். தஞ்சையின் தலைநகராகக் கூட 1845-ல் இருந்திருக்கிறது. இந்த நிதிநிலை அறிக்கையில் கூட, தரங்கம்பாடியிலுள்ள டேனிஷ் கோட்டையைப் புதுப்பித்து ஒரு பொருட்காட்சி அமைப்பதற்கு புதிய அரசு ஏற்பாடு செய்திருப்பதாகக் கூறப்பட்டுள்ளது. எனவே, அப்படிச் சிறப்பு வாய்ந்த அந்த ஊருக்குநேரடியாகக்கவனம் செலுத்தி குடிநீர்பிரச்சினையைத் தீர்க்க, அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: தலைவரவர்களே, மாண்புமிகு கிட்டப்பா அவர்கள் தஞ்சை மாவட்டத்தைச் சேர்ந்தவர். நானும் அம்மாவட்டத்தைச் சேர்ந்தவன், அந்த மாவட்டத்தின் பிரதிநிதியாகவும் இங்கே அமைச்சரவையில் இருக்கிறேன் என்று கருதுகிறேன். ஆகவே, இந்தப் பிரச்சினை ஆழ்ந்த அனுதாபத்தோடு பரிசீலிக்கப்படும்.

திரு. எஸ். கணேசன்: தலைவரவர்களே, பேரூராட்சி மன்றம் இந்த நீண்ட காலக் கடன் வேண்டுமென்று தீர்மானம் நிறைவேற்றி அனுப்பி இருக்கிறது. நிதிநிலை அறிக்கையில் கூட, தமிழ் வளர்ச்சிக்காக டேனிஷ் கோட்டை பாதுகாக்கப்படும் என்று கூறப்பட்டிருக்கின்றது. ஆகவே, இதற்கு ஒரு முக்கியத்துவம் கொடுத்து விரைவாகச் செயல்படுத்த அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: தலைவரவர்களே, நான் ஏற்கனவே சொன்னதைப் போல, யாரிடமிருந்து பரிந்துரை வர வேண்டுமோ, அவரிடமிருந்து வந்ததும் இது பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. துரை முருகன்: பொதுவாகவே, சில பஞ்சாயத்துக்களில் இந்தக் குடிநீர்ப் பிரச்சினை பெரிய பிரச்சினையாக இருக்கிறது. நிதி இல்லாத காரணத்தால் பல தொல்லைகளுக்கு ஆளாகி இருக்

கின்றன. ஆகவே, அப்படிப்பட்ட ‘‘ஜெனுாயின் கேஸ்களில்’’ அரசு முழுத் தொகையையும் கொடுக்க முன்வருமா? ஆளுநர் உரையில் கூட, கிராமங்களுக்குக் குடிநீர் பற்றி முக்கியத்துவம் கொடுத்திருக்கிறுர்கள். ஆகவே, முழுத் தொகையையும் அரசே வழங்கி குடிநீர்த் திட்டத்தைச் செயல்படுத்த முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

[முற்பகல் 9-20]

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் குடிநீர் வழங்குவதிலே ரூரல் வாட்டர் சப்ளை ஸ்கீம் என்பது ஒன்று. இது பேரூராட்சி கீழ் வருகிறது. இது வேறு திட்டம். எனவே, இவைகள் இரு வேறு வகையான திட்டங்கள். கிராமங்களுக்குக் குடிதண்ணீர் வழங்கப்பட வேண்டு மென்று நிதிநிலை அறிக்கையிலேயே சொல்லப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. சி. கோவிந்தராசன்: தலைவர் அவர்களே, மக்களுக்குக் குடிநீர் வழங்குவதை இந்த அரசு பிரதான வேலையாக எடுத்துக் கொண்டிருக்கிறது. அப்படியிருக்க, ஏற்கனவே குடிநீர் வாரியத் தின் மூலம்பஞ்சாயத்து ஒன்றியங்களுக்குப் பலதிட்டங்கள் கொடுக் கப்பட்டிருக்கின்றன. அப்பேர்ப்பட்ட திட்டங்கள் இருந்தும், அவைகள் நிறைவேற்றப்படாமல் இருப்பது மட்டுமல்ல, குடி நீர் கொடுக்காமல் இருக்கவும் இந்த பீ.டீ.ஓ.க்கள், பஞ்சாயத்துத் தலைவர்கள் திட்டமிட்டு ஏற்பாடு செய்து கொண்டிருப்பதால் அதற்குத் தக்க நடவடிக்கை எடுப்பதற்கு இந்த அரசு முன்வருமா? அப்பேர்ப்பட்ட ஒரு நிலைமை, நெல்லிக்குப்பம் பஞ்சாயத்து ஒன்றி யத்தின்கீழ் கோழிக்குப்பம் பஞ்சாயத்தில் மோட்டார் பற்றி எரிந்து விட்டதால், கடந்த ஒரு மாதகாலமாகக் குடிப்பதற்குத் தண்ணீர் இல்லாமல் கஷ்டப்படுகிறுர்கள். இதற்கு வேண்டிய நடவடிக்கை எடுப்பார்களா?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இது தரங்கம்பாடியைப் பற்றியது.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய தமிழகத்தின் முதல்வர், புரட்சித் தலைவர் அவர்கள், இந்தியா சுதந்திரம் அடைந்து 30 ஆண்டுகள் ஆகியும்கூட இன்னும் குடிநீர் வசதி செய்து கொடுக்கப்படவில்லையே என்று வேதனைப்படுகிறுர்கள் என்பதை நீங்கள் அறிவீர்கள். எனவே, இந்தப் பிரச்சினையை நாங்கள் We are going with break neck speed எவ்வளவு வேகமாக முடியுமோ அந்த அளவுக்கு நடவடிக்கை எடுப்போம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

TRUTH ALONE TRIUMPHS

[1977 ஆகஸ்ட் 3]

திரு எஸ்.ஜே. இராமசாமி : தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் துணைக் கேள்விக்குப் பதில் அளிக்கும்போது, கிட்டப்பாவும், நானும் ஒரே மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் என்று குறிப்பிட்டார்கள். அப்படியானால், மற்ற மாவட்டங்கள் புறக்கணிக்கப்படும் என்று அர்த்தமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவர் அவர்களே, அவரை நெருக்கமாக இணைப்பதற்காக உறவு முறையைச் சொன்னேன். எல்லா மாவட்டங்களும் கவனிக்கப்படும்.

திரு க.அன்பழகன்: தலைவர் அவர்களே, குடிநீர்த் திட்டத்தை மிக வேகமாக நிறைவேற்றுவதில், தீவிரமாக நடவடிக்கை எடுக்கப் போகிறோம் என்று அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். இதைத் தீவிரப்படுத்த ஆயுள் காப்பீட்டுக் கழகத்திலிருந்து ஆண்டுதோறும் எவ்வளவு கடன் பெறுகின்றோமோ, அதைப் பொறுத்துத்தான் திட்டங்களை நிறைவேற்ற முடிகிறது. எனவே, 1975–76, 1976–77 ஆண்டுகளில் ஆயுள் காப்பீட்டுக் கழகம் எவ்வளவு கடன் கொடுத்திருக்கிறது? வருகிற 1977–78ஆம் ஆண்டில் எவ்வளவு நிதி கொடுக்க அவர்கள் இசைந்தார்கள், என்ன உடன்பாடு ஏற்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவிப்பார்களா ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : பேரவைத் தலைவர் அவர்களே, இதற்குத் தனிக் கேள்வி போடும்படி கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வி நேரம் முடிவுற்றது.

[குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்].

2. அறிவிப்பு

மதுரைப் பல்கலைக் கழக ஆட்சிக் குழுவிற்குத் தேர்தல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு: மதுரைப் பல்கலைக்கழக ஆட்சிக் குழுவிற்கு (Senate) இச்சட்டப் பேரவையின் சார்பில் உறுப்பினர்களாக இருந்த (1) திரு. கே.பி. கோபால், (2) திரு. இரா. இராமலிங்கம், (3) திரு. குப்பல் கே.எஸ். ராமகிருஷ்ணன், (4) திரு. எம்.எஸ்.கே. சத்தியேந்திரன் ஆகியோரின் பதவிக் காலம் 31–1–1976-ம் நாளுடன் முடிந்துவிட்டதால், பல்கலைக்கழகப் பேரவையில் ஏற்பட்டுள்ள நான்கு வெற்றிடங்களுக்குத் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்கள் தங்களிலிருந்து நால்வரைத் தேர்ந்தெடுக்க ஏற்பாடு செய்யுமாறு, மதுரைப் பல்கலைக்கழகம் கோரியுள்ளது. பல்கலைக்கழகத்தின் விதிமுறைப்படி பதிவாரி அடிப்படையில் (Proportional representation) இத்தேர்வு நடைபெறுவதில்லை